# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 256/மா/2015

ஆணை எண். 35/2017

நாள் : 24/03/2017

திரு ஆர். சுரேஷ்,
சென்னை – 16. – முறையீட்டு மனுதாரர்.

மண்டல அலுவலர்,
மண்டலம் – 12,
ஆலந்தூர், சென்னை மாநகராட்சி,
சென்னை – 16. – எதிர் மனுதாரர்.

சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் மண்டலம், ராஜா தெரு, 3–வது சந்து, 7–சி எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு R. சுரேஷ் அவர்களின் 26.12.2015 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.12.2015 அன்று பெறப்பட்டு 256/2015 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:-

## ஆணை

சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் மண்டலம் (12–வது மண்டலம்), வார்டு எண்.161, ராஜா தெருவில் வசிக்கும் திரு R. சுரேஷ் அவர்கள் தனது 26.12.2015 நாளிட்ட முறையீட்டு மனுவில் மன்ற உறுப்பினர் நிதியிலிருந்து சாலை அமைக்க நிதி வழங்கியது, அம்மா உணவகம் சமூக கூடமாக செயல்பட்டு வருவது மற்றும் ஆலந்தூர் வடக்கு, தெற்கு ராஜா தெருக்கள் மற்றும் சந்துகளில் சாலைகள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்த விவரங்களைக் குறிப்பிட்டும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சரியான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர், 03.05.2016 அன்று நடைபெற்ற விசாரணைக்கு வருகை தந்து வாக்குமூலம் அளித்தார். விசாரணையின்போது 12–வது மண்டலத்தில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட பணிகள் நடைபெறவில்லையென்றும், 161–வது வார்டில் LED பல்புகள் பொருத்தப்படவில்லையென்றும் தெரிவித்து சில புகைப்பட நகல்களை சமர்ப்பித்தார். மேலும், நியாயவிலைக் கடை கட்டி திறக்கப்படாதது, 161–வது வார்டு, ராஜா தெருவில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டப்படாதது, ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் வீடுகளுக்கு மனைப்பட்டா வழங்காதது மற்றும் MKN சாலையில் அரசு நிலம் ஆக்கிரமிப்பு குறித்த பிற அரசு துறைகள் சம்பந்தப்பட்ட பணிகள் குறித்தும் விசாரணையின்போது தெரிவித்தார்.

3. முறையீட்டு மனுதாரர் அளித்த புகைப்பட நகல்கள் மற்றும் விசாரணையின்போது அவர் அளித்த வாக்குமூலத்தின் நகல் மண்டல அலுவலருக்கு அனுப்பப்பட்டு அறிக்கை பெறப்பட்டது. மேலும், 20.12.2016 அன்று நடைபெற்ற விசாரணைக்கு மண்டல அலுவலர் வருகை தந்து, இறுதி அறிக்கை அளிப்பதாக உறுதி அளித்ததைத் தொடர்ந்து, 26.12.2016 நாளிட்ட கடித ந.க. எண். இ1 /2685/2014–ல் தனது இறுதி அறிக்கையினையும், புகைப்பட நகல்களையும் சமர்ப்பித்தார். அவ்வறிக்கையில் வடக்கு மற்றும் தெற்கு ராஜா தெரு, 2,3,4,5,6 மற்றும் 10 எண்களிட்ட ராஜா தெரு சந்துகளில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தது சம்பந்தமான பணி விவர மதிப்பீடுகளுடன் புகைப்பட ஆதாரங்களையும் சமர்ப்பித்தார்.

4. முறையீட்டு மனுதாரர், மாநகராட்சி அலுவலர்கள் குறித்து குறிப்பிடும் படியான குற்றச்சாட்டுகள் எதுவும் தெரிவிக்கவில்லை. தனது முறையீட்டு மனுவில் சாலைகள் மற்றும் பிற பணிகளுக்கு நிதிஒதுக்கீடு செய்த விவரங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளார். மேலும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சில பணிகள் குறித்த விவரங்களைப் பெற்று, அப்பணிகள் முடிவடைவதற்கு முன்பிருந்த நிலையினை குறிக்கும் புகைப்பட நகல்களை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். மண்டல அலுவலர், சம்பந்தப்பட்ட பணிகள் முடிவடைந்த பின்பு எடுக்கப்பட்ட புகைப்பட நகல்களை சமர்ப்பித்து பணிகள் நிறைவு பெற்றுள்ளதை உறுதி செய்துள்ளார். எனவே, முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள பணிகள் முடிவுற்ற நிலையில், இந்நேர்வு குறித்த நடவடிக்கையினை இத்துடன் முடித்துவைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 24–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

திரு ஆர். ச[illegible]
எண்.7–சி, 3வது சந்து,
ராஜா தெரு,
ஆலந்தூர், சென்னை – 16.

மண்டல அலுவலர்,
மண்டலம் – 12.,
ஆலந்தூர், சென்னை மாநகராட்சி,
சென்னை – 16.

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரி